இந்து தமிழ்
THE HINDU

# வன விழாவை முன்னிட்டு மரக்கன்றுகள் நடவு

கோவை

வன விழா 2022-ஐ முன்னிட்டு, கோவை ஆர்.எஸ்.புரத்தில் உள்ள வன மரபியல், மரப்பெருக்கு நிறுவனத்தில் (ஐஎஃப்ஜிடிபி) செயல்பட்டுவரும் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையத்தில் மரக் கன்றுகள் நடும் விழா நேற்று நடைபெற்றது. ஐஎஃப்ஜிடிபி இயக்குநர் சி.குன்னிகண்ணன் இந்த நிகழ்வை தொடங்கி வைத்து, மாணவர்களுக்கான விழிப்புணர்வு சுவரொட்டியை வெளியிட்டார்.



▲ கோவை ஆர்.எஸ்.புரத்தில் உள்ள வன மரபியல், மரப்பெருக்கு நிறுவனத்தில் மரக்கன்றை நட்ட ஐஎஃப்ஜிடிபி இயக்குநர் சி.குன்னிகண்ணன்.

1950-ம் ஆண்டில் அப்போதைய மத்திய வேளாண், உணவு அமைச்சராக இருந்த கே.எம். முன்ஷியால் தொடங்கப்பட்ட இந்த மரம்நடு விழாவின் முக்கியத்துவம் குறித்து முதுநிலை முதன்மை விஞ்ஞானி கண்ணன் சி.எஸ்.வாரியர் விளக்கினார். அதைத்தொடர்ந்து, அத்தி, கொடுக்காய், அற்றுப் பூவரசு, வாகை, நீர் மருது போன்ற பழமைவாய்ந்த மர இனங்கள், மருத்துவ மர வகைகளின் மரக்கன்றுகளை அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் தனியார் கல்லூரிகளின் மாணவர்கள் ஐஎஃப்ஜிடிபி தாவரவியல் பூங்காவில் நட்டனர். வன மஹோத்ஸவ்-2022-ன் ஒரு பகுதியாக பொதுமக்களுக்காக 'ஒரு மரக்கன்று நடவு புகைப்பட சவால்' போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது. இதில், நாடு முழுவதிலும் இருந்து பல்வேறு தரப்பு மக்கள் பங்கேற்றனர். போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் இ-சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. என்விஸ் தகவல் அலுவலர் டி. வாமதேவன் நன்றி தெரிவித்தார்.

44. News in The Hindu Tamil, Coimbatore, 06.07.2022, Van Mahotsav Celebrations by IFGTB ENVIS.